விருதுநகரில் ஜூலை 15–இல் கல்வித் திருவிழா

மதுரை, ஜூலை 12: முன்னாள் முதல்வர் காமராஜரின் 121–ஆவது பிறந்த நாளையொட்டி, விருதுநகரில் கல்வித் திருவிழா – 2023, வருகிற 15–ஆம் தேதி நடைபெறுகிறது.

விருதுநகர் கே.வி. சாலா பள்ளி வளாகத்தில் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நிகழ்ச்சிகள் தொடங்கும். நாடார் மகாஜன சங்க பொதுச் செயலாளர் ஜி. கரிக்கோல்ராஜ் வரவேற்கிறார். மாநில அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பி. கீதா ஜீவன், டி. மனோ தங்கராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றுப் பேசுகின்றனர்.

தினமணி ஆசிரியர் கி. வைத்தியநாதன், மாநில அளவிலான பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார். தமிழறிஞர்கள் காரைக்குடி அரு.நாகப்பன், சரசுவதி நாகப்பன் ஆகியோர் காமராஜர் குறித்து பேருரையாற்றுகின்றனர்.

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி இயக்குநர்கள் வி. விஜயதுரை, பி.சி.ஜி. அசோக்குமார், கே. நாகராஜன், முன்னாள் இயக்குநர் சி.எஸ். ராஜேந்திரன், குளோபல் பாலிபேக் அதிபர் டி.எம்.எம்.ஆர்.டி. முரளிதரன் ஆகியோர் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டோருக்கு 'கல்வித் தாய்', 'கல்வித் தந்தை' விருதுகளை வழங்குகின்றனர்.

விழாவில், முன்னாள் அமைச்சர்கள் கே.டி. ராஜேந்திர பாலாஜி, க. பாண்டியராஜன், சட்டப் பேரவை உறுப்பினர் பி.எச். மனோஜ் பாண்டியன், நாடார் மகாஜன சங்கம், நாடார் உறவின் முறை சங்கம், மகளிர் மன்றங்கள், பாண்டியனார் தொழிற்சங்கம் உள்பட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

முன்னதாக, விருதுநகரில் உள்ள காமராஜரின் இல்லத்தில் நோட்டு, புத்தகங்களை காணிக்கையாக வைத்து அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறுகிறது. காலை 9 மணிக்கு காமராஜர் விளக்குக்கு மலர் அர்ச்சனை நடைபெறுகிறது.

தில்லிக் கம்பன் கழகம் தொடக்கம்

புது தில்லி, ஜூலை 12: தலைநகர் தில்லியில் பல்வேறு தமிழ் அமைப்புகள் செயல்பட்டு வரும் நிலையில், புதிதாக தில்லிக் கம்பன் கழகம் செவ்வாய்க்கிழமை (ஜூலை 11) தொடங்கப்பட்டது.

தில்லிக் கம்பன் கழகத்தை 11 பேர் இணைந்து தொடங்கியுள்ளனர். இந்த அமைப்பு தில்லி அரசிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

'கம்பர் இயற்றிய கம்பராமாயணம் மொழிச் செழுமைமிக்கதாக மட்டுமன்றி, அறநெறிகளைப் போதிக்கின்ற காப்பியமாகவும் திகழ்கிறது.

எனவே, தில்லிக் கம்பன் கழகம் தமிழையும், அறத்தையும் நிலைபெறச் செய்வதற்கும், பல்வேறு மொழிகளுக்கு இடையே இணக்கத்தை உண்டாக்குவதற்கும் பணியாற்றும்' என அந்த அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இதன் நிறுவனத் தலைவராக கே.வி.கே. பெருமாள், துணைத் தலைவராக எம். ரமேஷ், செயலாளராக எஸ்.பி. முத்துவேல், இணைச் செயலாளராக ஏ. புகழேந்தி, பொருளாளராக டி.வி. சரவணன் ராஜன், இணைப் பொருளாளராக எம்.எஸ். ரவி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று, செயற்குழு உறுப்பினர்களாக எஸ். சிவராமகிருஷ்ணன் (எ) முரளி, பா. குமார், வி. அருணாசலம், எஸ். ரவிச்சந்திரன், சித்ரா கணேசன் ஆகியோர் செயல்படுவர்.

'16 வயதினிலே' திரைப்படத் தயாரிப்பாளர் எஸ்.ஏ.ராஜ்கண்ணு (77) காலமானார்

சென்னை, ஜூலை 12: '16 வயதினிலே' திரைப்படத் தயாரிப்பாளர் எஸ்.ஏ.ராஜ்கண்ணு (77) உடல் நலக்குறைவு காரணமாக சென்னையில் செவ்வாய்க்கிழமை காலமானார்.

'16 வயதினிலே', 'கிழக்கே போகும் ரயில்', 'கன்னிப் பருவத்திலே...' போன்ற திரைப்படங்களைத் தயாரித்தவர் எஸ்.ஏ. ராஜ்கண்ணு. அவரது படங்களில் நடித்த ரஜினி, கமல், ஸ்ரீதேவி, ராதிகா, கவுண்டமணி, பாக்யராஜ், வடிவுக்கரசி, ராஜேஷ் ஆகியோர் பிரபலமடைந்தனர்.

இயக்குநர் பாரதிராஜாவை தமிழ் திரையுலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் எஸ்.ஏ.ராஜ்கண்ணு. பாரதிராஜாவின் இயக்கத்தில் கமல், ரஜினி, ஸ்ரீதேவி ஆகிய மூவரும் நடித்து தமிழ்த்திரையுலகையே புரட்டிப்போட்ட படங்களில் ஒன்று '16 வயதினிலே'.

அம்மன் கிரியேஷன்ஸ் சார்பில் எஸ்.ஏ.ராஜ்கண்ணு கடைசியாக 'மகாநதி' படத்தை தயாரித்தார்.

அவரின் மறைவுக்கு நடிகர் கமல்ஹாசன், இயக்குநர் பாரதிராஜா, நடிகை ராதிகா உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

எஸ்.ஏ.ராஜ்கண்ணுவுக்கு இரு மகள்கள் உள்ளனர். அவரது உடல் தாம்பரம் அருகே சிட்லபாக்கத்தில் புதன்கிழமை தகனம் செய்யப்பட்டது.

ரூ.358 கோடியில் 3,000 நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள்

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்ட குடியிருப்புகளை சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து புதன்கிழமை திறந்துவைத்து பயனாளிகளுக்கு சாவிகளை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலர் அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண் இயக்குநர் பொ.சங்கர்.

சென்னை, ஜூலை 12: தமிழகத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்ட 3,000 குடியிருப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக புதிய குடியிருப்புகளை புதன்கிழமை அவர் திறந்தார்.

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் திட்டங்களில் ஒன்றான அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், சென்னையில் சந்தோஷ் நகர் திட்டப் பகுதி ஒன்று மற்றும் இரண்டில் பழுதடைந்த குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, புதிதாக 560 குடியிருப்புகளும், மூலக்கொத்தளம் பகுதி ஒன்று மற்றும் இரண்டு திட்டங்களில் ஆயிரத்து 44 புதிய குடியிருப்புகளும், செங்கல்பட்டு மாவட்டம் அன்னை அஞ்சுகம் நகர் திட்டப் பகுதியில் 192 குடியிருப்புகள், காயரம்பேடு திட்டப் பகுதியில் 64குடியிருப்புகளும், பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் 480 குடியிருப்புகளும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டம் பத்தலபல்லி திட்டப் பகுதியில் 304 அடுக்குமாடி குடியிருப்புகள், தருமபுரி மாவட்டம் மோலையானூர் திட்டப் பகுதியில் 192 அடுக்குமாடி குடியிருப்புகள், தேனி மாவட்டம் வடவீரநாயக்கன்பட்டி பகுதியில் 110 குடியிருப்புகள், கன்னியாகுமரி மாவட்டம் ஈசாந்திமங்கலம் திட்டப் பகுதியில் 64 குடியிருப்புகள் என மொத்தம் ரூ.358.15 கோடியில் 3 ஆயிரத்து 10 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இந்தக் குடியிருப்புகளை, சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். குடியிருப்புகளை திறந்து வைத்ததன் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு உத்தரவுகளை முதல்வர் வழங்கினார்.

15 ஆயிரத்து 505 குடியிருப்புகள்: திமுக அரசு பொறுப்பேற்றதிலிருந்து, இதுவரை ரூ.1,583.41 கோடி மதிப்பில் 15 ஆயிரத்து 505 அடுக்குமாடி குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புகள் ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்புடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளன என்று தமிழக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டுவசதி வாரியம்: வீட்டுவசதி வாரியம் சார்பில், ரூ.276.15 கோடி மதிப்பில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்தக் கட்டடங்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

கோவை மாவட்டம் சௌரிபாளையத்தில் வீட்டுவசதி வாரிய பிரிவு அலுவலகம், விருதுநகர் மாவட்டம் கூரைகுண்டு கிராமத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், நீலகிரி கூடலூர் கிராமம், தேனி மாவட்டம் வடவீரநாயகன்பட்டி, சென்னை அமைந்தகரை முள்ளம் பகுதி, மயிலாப்பூர், திருவான்மியூர், கோவை கணபதி ஆகிய இடங்களில் வணிக வளாகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. சென்னை திருவான்மியூர். கோவை கணபதி, கிருஷ்ணகிரி மாவட்டம் நல்லூர் ஆகிய இடங்களில் உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இந்தக் கட்டடங்களை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, வீட்டுவசதித் துறை செயலர் அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் நிர்வாக இயக்குநர் பொ.சங்கர் உள்பட பலர் பங்கேற்றனர்.

ஸ்ரீஅண்ணாஸ்வாமி அய்யங்கார் வித்வத் சபா வேத சொற்பொழிவு கருத்தரங்கம்

மன்னார்குடியில் நாளை தொடங்குகிறது

மன்னார்குடி, ஜூலை 12: மன்னார்குடி ஸ்ரீ அண்ணாஸ்வாமி வித்வ சபா சார்பில் 76–ஆவது ஆண்டாக வேத சொற்பொழிவு மற்றும் கருத்தரங்கம் வரும் 14–ஆம் தேதி தொடங்கி 3 நாட்கள் நடைபெறுகிறது.

காஞ்சி காமகோடி பீடத்தின் 68–ஆவது மடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஆலோசனையின் பேரில் மன்னார்குடி உ.வே.ஏ. ஸ்ரீவாஸய்யங்கார் சுவாமியால் 1944–ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஸ்ரீ அண்ணாஸ்வாமி அய்யங்கார் வித்வத் சபா 76–ஆவது ஆண்டாக வார்ஷிக த்ரிமதஸ்த சதஸ் என்னும் வேத சொற்பொழிவு மற்றும் கருத்தரங்கத்தை வெள்ளிக்கிழமை (ஜூலை 14) முதல் 3 நாட்கள் நடத்துகிறது. அத்துடன் வித்வத் சபை ஸ்ரீ உ.வே.வித்வான் வேளுக்குடி கிருஷ்ணன் சுவாமியின் சஷ்டி அப்த பூர்த்தியும் நடைபெறுகிறது.

நாள்தோறும் காலை10 மணி முதல் 12 மணி வரை, மாலை 3 மணி முதல் 4.30 மணி வரை யஜுர், சாம, ரிக், திவ்ய பிரபந்த தேவ வகுப்புகள் மற்றும் வாய்மொழி தேர்வுகள் நடைபெறும். இதில் தமிழகம் மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து 150–க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்கின்றனர். அனைத்துத் துறைகளிலும் வெற்றி பெற்று தகுதிச் சான்றிதழைப் பெறும் வித்யார்திகளுக்கு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் மாதாந்திர கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

முதல்நாள் இருள் நீக்கும் வித்யை என்ற தலைப்பில் உ.வே. வித்வான் வேளுக்குடி கிருஷ்ணன், ஸ்ரீவித்யையும் ராஜகோபாலனும் என்ற தலைப்பில் உ.வே. வித்வான் வெங்கடேஷ் ஸ்வாமியும், இரண்டாம் நாள் 'வேத மஹிமை' எனற தலைப்பில் பிரம்ம ஸ்ரீ நீலகண்ட சாஸ்திரிகள் ஸ்வாமியும், ராமானுஜனும், ராமானுஜரும் என்ற தலைப்பில் உ.வே.வித்வான் பத்மநாபா சாரியார் ஸ்வாமியும், மூன்றாம் நாள் 'நித்ய கர்மா' என்ற தலைப்பில் ஸு ப்ராஹ்மண்ய ரகுநாதாச்சார் ஸ்வாமியும், ஸ்ரீ பாஞ்சராத்தில் 'சாந்தி கர்மாக்கள்' என்ற தலைப்பில் ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம வித்வான் உ.வே. ராஜேஸ்குமாரும் சொற்பொழிவு ஆற்றுகின்றனர்.

நிகழாண்டு முதல் அகோபில மடத்தின் ஜீயர் சுவாமி ஆலோசனையின் படி ரிக் வேதத்தில் வாய்மொழித் தேர்வு நடைபெறும். மேலும் விவரங்களுக்கு 98400 99833 என்ற கைப்பேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.

மகளை விஷம் கொடுத்துக் கொன்று நகர்மன்ற உறுப்பினர், கணவர் தற்கொலை

அருண்லால்–தேவிப்பிரியா தம்பதி. (வலது) உயிரிழந்த மோனிஷா.

ராசிபுரம், ஜூலை 12: ராசிபுரம் நகர்மன்ற திமுக உறுப்பினர், கணவர் ஆகியோர் தங்களது மகளுக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் நகர்மன்ற திமுக துணைச் செயலராக இருந்தவர் அருண்லால் (53). ராசிபுரம் கடைவீதியில் நகைக் கடை நடத்தி வந்தார். இவரது மனைவி தேவிப்பிரியா (45), ராசிபுரம் நகர்மன்ற 13–ஆவது வார்டு திமுக உறுப்பினராக இருந்தார்.

ராசிபுரம், பொம்மித் தெருவில் வசித்துவந்த இத்தம்பதிக்கு இரு மகள்கள் உள்ளனர். மூத்த மகள் வேதாஸ்ரீ (21), பெங்களூரு இன்போசிஸ் நிறுவனத்தில் பணிபுரிகிறார். மற்றொரு மகள் மோனிஷா (17), ராசிபுரத்தில் உள்ள தனியார் பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்தார்.

இவரது வீட்டுக்கு புதன்கிழமை அதிகாலை நண்பர் ஒருவர் சென்றபோது, தம்பதியர் அருண்லால், தேவிப்பிரியா ஆகியோர் தூக்குமாட்டிய நிலையிலும், அருகில் மோனிஷா இறந்துகிடந்ததும் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

தகவல் அறிந்த ராசிபுரம் டிஎஸ்பி டி.கே.கே.செந்தில்குமார், காவல் ஆய்வாளர் சுகவனம் உள்ளிட்ட காவல் துறையினர் நிகழ்விடம் சென்று சடலங்களை பிரேத பரிசோதனைக்காக ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

முதற்கட்ட விசாரணையில், தம்பதியர் இருவரும் மோனிஷாவுக்கு விஷம் கொடுத்து கொன்றுவிட்டு அவர்களும் தூக்கிட்டு இறந்தது தெரியவந்தது. கடன் பிரச்னையால் தற்கொலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இதையடுத்து மூவரின் கைப்பேசிகளையும் கைப்பற்றிய போலீஸார் அந்தக் குடும்பத்தாருடன் தொடர்பில் இருந்த உறவினர்கள், நண்பர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். எனினும் அவர்களது தற்கொலைக்கான காரணம் வெளியாகவில்லை.

இறந்த அருண்லாலின் தாய் சுசிலா மோகன்லால் என்பவர் ராசிபுரத்தில் ஏற்கெனவே இருமுறை திமுக சார்பில் போட்டியிட்டு நகர்மன்ற உறுப்பினராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலி மாநகராட்சி
நமக்கு நாமே திட்டம் 2022-2023, மூலதன மானிய நிதி 2022-23, நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2023-24, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-2023, மாநில நிதி குழு ஊக்கத்தொகை மற்றும் பொதுநிதி
மின்னணு முறையிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.25/2023-24

1.	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் & முகவரி	ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி			
2.	வேலையின் விபரம், மதிப்பீடு தொகை, முன் வைப்புத் தொகை மற்றும் பணிகளின் எண்ணிக்கை	பணி விபரம்	எண்ணிக்கை	மதிப்பீடு தொகை ரூ.கோடியில்	முன் வைப்புத் தொகை ரூ.இலட்சத்தில்
		மழைநீர் வடிகால் பணிகள்	5	4.75	4.75
		கட்டிட பணிகள்	4	1.21	1.21
		[illegible] ஏற்பாடு பணி	1	1.73	1.73
		நாற்காலி மற்றும் மேசை கொள்முதல் செய்யும் பணி	2	0.30	0.30
		சாலைப்பணி	1	0.56	0.56
3.	ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த இணையதள முகவரி	மேற்காணும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அட்டவணையை கீழ்க்காணும் இணையதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். https://tntenders.gov.in			
4.	ஒப்பந்தப்புள்ளிகள் நகலை இறக்கம் செய்தல்	14.07.2023 காலை 10 மணி முதல் 31.07.2023 பிற்பகல் 3.00 மணி வரை			
5.	ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல்	14.07.2023 காலை 10 மணி முதல் 31.07.2023 பிற்பகல் 3.00 மணி வரை			
6.	ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள்	31.07.2023 பிற்பகல் 3.30 மணி			

செ.ம.தொ.இ./ 3599 / ஒப்பந்தப்புள்ளி/2023
ஆணையாளர்,
திருநெல்வேலி மாநகராட்சி.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர பொறியியல் துறை
கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (SWM/ Mech) அவர்களால் மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது.
இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 0887A / 2023
பொது மக்களுக்கு இடையூறாக சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளை பிடிக்க 5 எண்ணிக்கையில் மாடு பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்யும் பணி.
முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி
ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம். 03.08.2023 பிற்பகல் 3.00 மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் 04.08.2023 பிற்பகல் 3.30 மணி
மேலும் விவரங்களுக்கு : http://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ / 3626 / ஒப்பந்தப்புள்ளி / 2023
மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே / இ)
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிட்.,
பதிவு எண். ஜி.1113, 185, பிரகாசம் சாலை, சென்னை 600108
பொது விநியோகத் திட்ட சரக்குகள் நகர்வு டெண்டர் அறிவிப்பு
காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்கும் மற்றும் இணைப்பு சங்கங்களின் மூலம் நடத்தும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கும் பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளான 1) திருவான்மியூர், 2) விருகம்பாக்கம், 3) நந்தனம் 4) காட்டுப்பாக்கம் ஆகிய நான்கு கிடங்குகளில் இருந்து நகர்வு செய்து இறக்க (லாரி வாடகை மற்றும் இறக்கு கூலி உட்பட) சீலிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் லாரி உரிமையாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.
டெண்டர் படிவம் பெற ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) 5% வரிகள் உட்பட ரொக்கமாக செலுத்தி சென்னை தலைமை அலுவலகத்தில் 13.07.2023 தேதி முதல் மேற்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் டேவணி தொகை ரூ.1,00,000/–த்துடன் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) வரைவோலையாக 20.07.2023 அன்று பிற்பகல் 05.30 மணிக்குள் மேற்கண்ட அலுவலக முகவரியில் வந்து சேர வேண்டும். பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் மேற்கண்ட முகவரியில் 21.07.2023 வெள்ளி கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வருகை தரும் டெண்டர்–தாரர்கள் முன்னிலையில் டெண்டர்கள் திறக்கப்பட்டு இறுதி செய்யப்படும்.
டெண்டர்களை தள்ளிவைக்கவோ அல்லது ரத்து செய்யவோ குழுத்தலைவரின் அதிகாரத்திற்குட்பட்டது.
செ.ம.தொ.இ/783/வரைகலை/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"
இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாடு அரசு – தொழில் நுட்பக்கல்வித்துறை
தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை 600 025
மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண்.8தே.பொ/வ.ஆ.2/தொநுகவ/2023–24 நாள் 10.07.2023
முன்தகுதி ஒப்பந்தப்புள்ளி படிவம்: மொத்த தொகை/இருஉறை முறை
தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப் பொறியாளர், பொது, தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை 600 025 அவர்களால் பதிவுபெற்ற தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு கோரப்படுகிறது.

வ. எண்.	வேலையின் பெயர்	தோராய மதிப்பீடு (சரக்கு மற்றும் சேவை வரியுடன்) ரூபாய் இலட்சத்தில்	முன்வைப்புத் தொகை ரூபாய் மற்றும் பணிமுடிக்க வேண்டிய காலம்	தகுதியான ஒப்பந்ததாரர்	முன்வைப்புத் தொகை செலுத்தும் முறை
1	வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா சேர்க்காடு கிராமத்திலுள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் தற்போதைய கல்விசார் தொகுப்பில் நான்காம் மற்றும் ஐந்தாம் தளம் கட்டும் பணி.	739.50	380000/– 9 மாதங்கள்	வகுப்பு 2 மற்றும் அதற்கு மேல்	மின்னணு முறையில்

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், மின்னணு வழியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்து http://tntenders.gov.in இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம். 2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: 17.08.2023 காலை 11.00 மணிவரை (மின்னணு முறை) 3. மின்னணு ஒப்பந்த புள்ளிகள் (முதல் உறை) திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 18.08.2023 காலை 11.30 மணி அளவில் 4. மின்னணு ஒப்பந்தத்தில் கலந்துகொள்ள மின்னணு கையொப்பம் கட்டாயமாகும். ஒப்பந்தப்புள்ளி விபரங்களில் ஏற்படும் மாற்றங்கள் திருத்தம் மேற்காணும் இணைய தளத்தில் மட்டும் வெளியிடப்படும்.
தலைமைப்பொறியாளர், பொது, சார்பில்
தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600025.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

தமிழ்நாடு அரசு – தொழில் நுட்பக்கல்வித்துறை
தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை 600 025
மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண்.தே.பொ/வ.ஆ.1/தொநுகவ/2023–24 நாள் 10.07.2023
ஒப்பந்தப்புள்ளி படிவம்: மொத்த தொகை/ஒருஉறை முறை
தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப்பொறியாளர், பொது, தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை 600 025 அவர்களால் பதிவுபெற்ற தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு கோரப்படுகிறது.

வ. எண்.	வேலையின் பெயர்	தோராய மதிப்பீடு (சரக்கு மற்றும் சேவை வரியுடன்) ரூபாய் இலட்சத்தில்	முன்வைப்புத் தொகை ரூபாய் மற்றும் பணிமுடிக்க வேண்டிய காலம்	தகுதியான ஒப்பந்ததாரர்	முன்வைப்புத் தொகை செலுத்தும் முறை
1	திருச்சி மாவட்டம் அண்ணா பல்கலைக் கழகத்தில் நிலையான 400 மீ தடகள பாதை அமைக்கும் பணி.	82.30	51200/– 6 மாதங்கள்	வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல்	மின்னணு முறையில்
2	அரியலூர் அரசு கலைக்கல்லூரியின் EVVS கட்டிடத்தின் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி.	55.60	37800/– 6 மாதங்கள்	வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல்	மின்னணு முறையில்
3	தஞ்சாவூர் தமிழ் பல்கலை கழகத்தின் நிர்வாக கட்டடம், நூலக கட்டடம், கூத்துகளரி கட்டடம், 'தா' மற்றும் 'நா' கட்டடங்களுக்கு சிறப்பு பழுதுபார்த்தல் பணி.	127.00	73500/– 6 மாதங்கள்	வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல்	மின்னணு முறையில்
4	சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா செட்டியார் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் தேர்வு கூட கட்டடம் கட்டும் பணி.	268.70	144500/– 9 மாதங்கள்	வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல்	மின்னணு முறையில்

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், மின்னணு வழியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்து http://tntenders.gov.in இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம். 2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசிநாள் மற்றும் நேரம்: 01.08.2023 காலை 11.30 மணிவரை (மின்னணு முறை) 3. மின்னணு ஒப்பந்த புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 02.08.2023 காலை 11.30 மணி 4. மின்னணு ஒப்பந்தத்தில் கலந்துகொள்ள மின்னணு கையொப்பம் கட்டாயமாகும். ஒப்பந்தப்புள்ளி விபரங்களில் ஏற்படும் மாற்றங்கள் திருத்தம் மேற்காணும் இணைய தளத்தில் மட்டும் வெளியிடப்படும்.
தலைமைப்பொறியாளர், பொது, சார்பில்
தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600025.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

இண்டியன் பேங்க் இந்தியன் வங்கி
அலகாபாத்
சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கு)
சேத்துப்பட்டு கிளை
812, பெரியார் EVR சாலை ரோடு, சேத்துப்பட்டு, சென்னை - 10. தொலைபேசி : 044 - 26425711 & 26411562. மின்னஞ்சல்: chetput@indianbank.co.in

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 8 மற்றும் 9-க்கு ஏற்ப எங்கள் சேத்துப்பட்டு கிளையின் கீழ்கண்ட கடன்தாரர்களுக்கு 17.04.2023 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகள் அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேலதிக வட்டியுடன் திரும்ப செலுத்தும் தேதி வரை சேர்த்து மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் தொகையை செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.
கீழே குறிப்பிட்டுள்ள தற்போதைய நிலுவைத்தொகையுடன் மேலும் மேலதிக வட்டி, செலவுகள் மற்றும் பிற கட்டணங்களும் சேர்த்து செலுத்த வேண்டும்.
சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் குறிப்பாக உரிய பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள சுவாதீன அறிவிப்பின்படி கீழ்கண்ட சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் விதி 8 மற்றும் 9-க்கு இணங்கவும், 07 ஜூலை 2023 அன்று கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.
கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்(கள்)/அடமானதாரர்(களு)க்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட கீழ்கண்ட சொத்துக்கள் இந்தியன் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய கீழ் குறிப்பிட்டுள்ள தொகை அத்துடன் மேலதிக வட்டி, செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தும் வகையில் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் இந்த சொத்துக்கள் தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது இந்தியன் வங்கிக்கு செலுத்தவேண்டிய பிணைய தொகைக்கு உட்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

1. கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி : (1) M/s. பவேரா லாப்ஸ், (கடன்தாரர்), மொத்த உரிமையாளர் : திரு. P V ரமேஷ், ஹர்வஷி அப்பார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.U3, முதல் தளம், புதிய எண்.18/2 (பழைய எண்.8/1C), தாமோதர் மூர்த்தி ரோடு, கீழ்பாக்கம், சென்னை - 600 010. **(2) திரு. P V ரமேஷ், (மொத்த உரிமையாளர்/அடமானதாரர்),** த/பெ P. வேலு, எண்.27, பழைய எண்.34, சாய் நிலையம், தாமோதர் மூர்த்தி ரோடு, கீழ்பாக்கம், சென்னை - 600 010. **(3) திருமதி. R. கவிதா, (ஜாமீன்தாரர்),** க/பெ P V ரமேஷ், எண்.27, பழைய எண்.34, சாய் நிலையம், தாமோதர் மூர்த்தி ரோடு, கீழ்பாக்கம், சென்னை - 600 010.

04.07.2023 தேதி வரை உள்ள தற்போதைய நிலுவைத்தொகை : ரூ.65,06,120/- (ரூபாய் அறுபத்து ஐந்து லட்சத்து ஆறாயிரத்து நூற்று இருபது மட்டும்).

2. கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி : (1) திரு. P V ரமேஷ், (கடன்தாரர்/அடமானதாரர்), த/பெ P. வேலு, எண்.27, பழைய எண்.34, சாய் நிலையம், தாமோதர் மூர்த்தி ரோடு, கீழ்பாக்கம், சென்னை - 600 010. **(2) திருமதி. R. கவிதா, (இணை-கடன்தாரர்),** க/பெ P V ரமேஷ், எண்.27, பழைய எண்.34, சாய் நிலையம், தாமோதர் மூர்த்தி ரோடு, கீழ்பாக்கம், சென்னை - 600 010.

04.07.2023 தேதி வரை உள்ள தற்போதைய நிலுவைத்தொகை : ரூ.39,84,935/- (ரூபாய் முப்பத்து ஒன்பது லட்சத்து எண்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஐந்து மட்டும்).

அசையா சொத்துக்களின் விவரங்கள் (வ. எண்.1 & 2-க்கான அடமான சொத்து) : திரு. P V ரமேஷ் அவர்களுக்கு சொந்தமான அடமான சொத்து : கதிர்வேடு கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 2520 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி வீட்டு மனையின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும், அத்துடன் கூடிய முடிக்கப்படாத கட்டிடம், இதன் மனை எண்.75 (பத்மாவதி நகர்), PPD/L.O. எண்.16/93 தேதி 09.02.1993-ன்படி CMDA-வால் அங்கீகரிக்கப்பட்ட தளவமைப்பு, சர்வே எண்கள்.50/2 மற்றும் 50/1B-ல் அடங்கியுள்ளது. எல்லைகள் - வடக்கில் : மனை எண்.70, தெற்கில் : 30 அடி ரோடு, கிழக்கில் : மனை எண்.74, மேற்கில் : மனை எண்.76. அளவீடு - கிழக்கிலிருந்து மேற்காக இரு பக்கங்களிலும் : 36 அடி மற்றும் வடக்கிலிருந்து தெற்காக இரு பக்கங்களிலும் : 70 அடி. 2520 சதுர அடி பரப்பளவு கொண்டு வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் துணை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

தேதி : 07.07.2023
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.

படிவம் A
பொது அறிவிப்பு
(இந்திய திவால் நிலை மற்றும் திவால் வாரியத்தின் ஒழுங்குமுறை சட்டப்பிரிவு 6-ன் படி பெருநிறுவன நபர்களுக்கான திவால் நிலைத் தீர்க்கும் செயல் முறை விதிமுறைகள் 2016-ன் கீழ்)
M/s. மீனாட்சி கார்கோ பார்வேடர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் கிரெடிட்டார்களின் கவனத்திற்கு

பொருத்தமான தகவல்கள்		
1.	பெருநிறுவன கடன்தாரரின் பெயர்	**M/s.** மீனாட்சி கார்கோ பார்வேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்
2.	கடன் பெற்ற நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டு	18/05/2017
3.	பெருநிறுவன கடன்தாரர் எந்த குழுமத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது / பதிவு செய்யப்பட்டுள்ளது	நிறுவனங்களின் பதிவாளர் – சென்னை
4.	பெருநிறுவனத்தின் அடையாள எண் / பெறுநிறுவன கடன்தாரரின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்	U74140TN2017PTC116601
5.	பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலக முகவரி மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதேனும் இருந்தால்)	பிளாட் நெ.1, நெ.10A,S2, இரண்டாவது மாடி, சோழா ரெசிடென்சி, வடக்கு ராஜா வீதி ஆலந்தூர், சென்னை – 600 016
6.	பெருநிறுவன கடன்தாரரின் நொடிப்பு நிலை ஆரம்பித்த நாள்	10 ஜுலை 2023
7.	திவால் நிலைத் தீர்வு செயல்முறை முடிவடையும் நாள்	06 ஜனவரி 2024 (நொடிப்பு நிலை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 180 நாட்கள்)
8.	இடைக்கால தீர்மான வல்லுனரின் பெயர் மற்றும் பதிவு எண்.	திரு. R. தாமோதரன் Regn.No.IBBI/IPA-001/IP-P-02292/2021-2022/13592
9.	இடைக்கால தீர்மான வல்லுனர் Board – ல் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் மற்றும் முகவரி	நெ. 19/சைட் 24, 2வது கிராஸ் வீதி, கல்லூரி நகர், பீளமேடு, கோவை – 641 004. மின்னஞ்சல் : thamodharansubi@gmail.com
10.	இடைக்கால தீர்மான வல்லுனர் கடிதப் பரிமாற்றத்திற்காக பயன்படுத்தும் மின்னஞ்சல் மற்றும் முகவரி	பிளாட் எண்.107, துருவதாரா அப்பார்ட்மெண்ட், 241, டாக்டர் இராஜேந்திர பிரசாத் சாலை, டாடாபாத், கோவை – 641 012. ✆ : 0422–2492454 மின்னஞ்சல் : **meenakshicargocirp@gmail.com**
11.	உரிமைகோரல்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தேதி	**24.07.2023**
12.	கடன் வழங்குநர்களின் வகுப்புகள், பிரிவு 21இன் துணைப்பிரிவுகள் (6A) உட்பிரிவுகள் (B), ஏதேனும் இருந்தால் இடைக்காலத் தீர்மான வல்லுநரால் கண்டறியப்படுகிறது.	இடைக்கால தீர்மான வல்லுனரிடம் உள்ள தகவலின் படி உறுதி செய்யப்படவில்லை
13.	ஒரு வகுப்பில் கடன் வழங்குநர்களுக்காக அவர்களால் தேர்வு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட திவால் நிலை வல்லுநர்களின் பெயர் (ஒவ்வொரு வகுப்பிற்கும் மூன்று நபர்கள்)	இடைக்கால தீர்மான வல்லுனரிடம் உள்ள தகவலின் படி உறுதி செய்யப்படவில்லை
14.	(a) தொடர்புடைய படிவங்கள் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிகளின் விவரங்கள்	https://ibbi.gov.in/home/downloads இடைக்கால தீர்மான வல்லுனரிடம் உள்ள தகவலின் படி உறுதி செய்யப்படவில்லை

10.07.2023 அன்று (NCLT இணையதளத்தில் ஆணை பதிவேற்றப்பட்ட நாள் 10.07.2023) மாண்பமை தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை M/s. மீனாட்சி கார்கோ பார்வேடர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மீது பெருநிறுவன திவால் தீர்வு முறையை தொடங்க உத்தரவிட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.
M/s. மீனாட்சி கார்கோ பார்வேடர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் கிரெடிட்டார்கள் தங்களுக்கு வரவேண்டிய தொகைகள் இருந்தால் மேற்கண்ட வரிசை எண். 10ல் குறிப்பிட்டுள்ள இடைக்கால தீர்மான வல்லுநரிடம் அதற்கென உண்டான முறையான படிவங்களில் தக்க ஆதாரங்களுடன் 24.07.2023க்குள் (இடைக்கால தீர்மான வல்லுனரை நியமனம் செய்ததிலிருந்து பதிநான்கு நாட்கள்) முறையிட வேண்டும்.
நிதி கடன் வழங்குநர்கள் தங்களின் உரிமைகோரல்களை மின்னணு முறையில் மட்டுமே ஆதாரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்குநர்களும் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ, அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ ஆதாரத்துடன் சமர்ப்பிக்கலாம்.
வரிசை எண் 12ல் பட்டியலிடப்பட்டுள்ள வகுப்பைச் சேர்ந்த நிதிக் கடன் கொடுத்தவர்கள், வரிசை எண். 13இல் குறிப்பிட்டுள்ள மூன்று திவால் நிலை வல்லுநர்களுள் தங்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியை படிவம் CA மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும்.
தவறான உரிமைக்கோரல்கள் மற்றும் தவறான ஆவணங்களை சமர்பித்தால் அபராதம் விதிக்கப்படும்

Sd/-
திரு. R.தாமோதிரன் B.Sc., FCA.,
இடைக்கால தீர்மான வல்லுநர்
IBBI/IPA-001/IP-P02292/2021-2022/13592
AFA No : AA1/13592/02/310324/105601 Valid upto 31.03.2024

நாள் : 12.07.2023
இடம் : கோயம்புத்தூர்